**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075851

C

1. District : கடலூர் மாவட்டம் | PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் | Year: 2022 ஆண்டு | FIR No 03/2022 மு.த.அ. எண் | Date 26.04.2022 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 21.04.2022 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் : 15.00 hrs — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.04.2022 — Time நேரம் : 0800 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II — Time நேரம் : 0800 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 35 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி மீனாட்சிபேட்டை கிராமம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.நீலகண்டன் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கொளஞ்சியப்பன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 31 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் வியாபாரம் — (g) Address : முகவரி நெசவாளர் குடியிருப்பு, மீனாட்சிபேட்டை கிராமம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

சிவதங்கராசு, சர்வேயர், குறிஞ்சிப்பாடி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் .

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று **26.04.2022** ஆம் தேதி காலை **08.00** மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, மீனாட்சிபேட்டை கிராமம், நெசவாளர் குடியிறுப்பு என்ற முகவரியில் வசிக்கும் கொளஞ்சியப்பன் மகன் K.நீலகண்டன் என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : **26.04.2022,** விடுநர், K. நீலகண்டன் (வயது **31**) த/பெ கொளஞ்சியப்பன், நெசவாளர் குடியிருப்பு, மீனாட்சிபேட்டை, குறிஞ்சிப்பாடி தாலுக்கா, கடலூர் மாவட்டம். Cell : **8667734071** பெறுநர் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர். அய்யா, நான் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி தாலுக்கா, மீனாட்சிபேட்டை கிராமத்தில்

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. MALA ........ Rank Inspector ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS. VACAC, Cuddalore. ........ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K.Neel... 26/04/2022

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 26/4/22

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ........................
Rank: நிலை ........................ No. எண் .........

நெசவாளர் குடியிருப்பில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக குடிநீர் சுத்திகரிப்பு உபகரணங்கள் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். என் தாத்தாவுக்கு சொந்தமாக குறிஞ்சிப்பாடி சார் பதிவாளர் எல்லைக்குட்பட்ட மீனாட்சிபேட்டை கிராமத்தில் சுமார் 6.5 சென்ட் மனைகட்டு உள்ளது. அந்த மனை என் தாத்தாவின் வாரிசுகளான 6 பேருக்கு சொந்தமானதாக இருந்தது. அதில் ஒரு பாகம் எனது தாயார் கமலாவிற்கு இருந்தது. இந்த நிலையில் 22.03.2022 ஆம் தேதி இதர 5 பாகஸ்தர்களுக்கும் ரூ.4,70,825/– பணம் கொடுத்து பைசல் செய்தோம். 5 பாகஸ்தர்களுக்கும் பணத்தை பெற்றுக்கொண்டு என் தாயார் கமலா பெயருக்கு பாகபாத்திய விடுதலைப் பத்திரம் எழுதி கொடுத்தார்கள். இந்த ஆவணம் குறிஞ்சிப்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.656/2022 என பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்றை தினமே குறிஞ்சிப்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் உட்பிரிவு பட்டா பெறவேண்டி அதற்குண்டான கட்டணம் கட்டவேண்டும் என்று சொன்னார்கள். நான் எதற்கு என்று கேட்டதற்கு உட்பிரிவு கட்டணம் கட்டாயம் என்றும், பத்திரப்பதிவு விவரத்தை வருவாய் துறைக்கு தெரியப்படுத்தப்படும், அவர்கள் அளந்து உட்பிரிவு செய்வார்கள் என கூறினார்கள். அதனால் நான் உட்பிரிவு கட்டணத்தையும் செலுத்தினேன். இந்த நிலையில் 21.04.2022 ஆம் தேதி எல்லப்பன்பேட்டை கிராம உதவியாளர் ஆனந்தன் என்பவர் காலை சுமார் 11.00 மணிக்கு என்னிடம் வந்து அன்றைய தினமே மாலை 3.00 மணிக்கு எனது அம்மா கமலா பெயரில் உள்ள மனையினை அளப்பதற்காக சர்வேயர் சிவதங்கராசு என்பவர் வரஇருப்பதாகவும், அப்போது என்னையும் எனது தாயாரையும் அந்த இடத்தில் தயார் நிலையில் இருக்குமாறும் சொன்னார். அதன்படி நானும் எனது தாயாரும் 3.00 மணிக்கு அந்த இடத்தில் இருந்தபோது, சர்வேயர் சிவதங்கராசு, கிராம உதவியாளர் ஆனந்தன், எல்லப்பன்பேட்டை கிராம நிர்வாக அலுவலர் பாலகிருஷ்ணன் ஆகிய மூவரும் வந்தார்கள். பின்னர் அந்த இடத்தை சர்வேயர் சிவதங்கராசு, கிராமநிர்வாக அலுவலர் பாலகிருஷ்ணன் மற்றும் கிராம உதவியாளர் ஆனந்தன் ஆகியோர் உதவியுடன் மனையை அளந்தார். மனையை அளந்தபிறகு சர்வேயர் சிவதங்கராசு அம்மாவிடம் மனை சம்மந்தமான பத்திரம், மூலபத்திரம் ஆகியவற்றை கேட்டார். நான் அவர் அம்மாவிடம் கேட்ட ஆவணங்களை அவரிடம் கொடுத்தேன். ஆவணங்களை வாங்கிபார்த்த சர்வேயர் சிவதங்கராசு பட்டா மாற்றுவதற்கு ரூ.6,000/– செலவாகும் என அம்மாவிடமும் என்னிடமும் சொன்னார். நாங்கள் அதற்கு அவரிடம், குறிஞ்சிப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பட்டா மாற்றத்திற்குண்டான கட்டணத்தை

R. ஜெயமணி

கட்டிவிட்டோம் என்று தெரிவித்தோம். அதற்கு சர்வேயர் சிவதங்கராசு அது அரசுக்கு செலுத்தவேண்டிய பணம் இது தனியாக எங்களுக்கு கொடுக்கவேண்டிய பணம். ரூ.6,000/– பணம் கொடுக்கலனா பட்டா கிடைக்க நான் ஏற்பாடு செய்யமாட்டேன், அது தள்ளுபடியாயிடும், பட்டா வாங்குவதற்கு மறுபடியும் அலையவேண்டியிருக்கும் என சொன்னார். வேறுவழியில்லாமல் நாங்கள் தருவதாக ஒப்புக்கொண்டோம். மறுநாள் இது சம்மந்தமாக எனது தாயாரிடம் பேசினேன். எனது தாயாருக்கு ரூ.6,000/– லஞ்சம் கொடுத்து பட்டா மாற்றம் செய்ய விருப்பமில்லை. எனக்கும் லஞ்சம் கொடுத்து பட்டா மாற்றம் செய்ய விருப்பமில்லை. பட்டா வாங்குவதற்கு ரூபாய் 6,000/– லஞ்சம் கேட்கும் சர்வேயர் சிவதங்கராசு என்பவருக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க முடிவு செய்தோம். அவசரமாக எனது வேலை தொடர்பாக பொருட்கள் வாங்குவதற்கு சென்னை சென்றுவிட்டேன். பின்னர் இன்று தங்கள் அலுவலகம் வந்து புகார் மனு கொடுக்கிறேன். சர்வேயர் சிவதங்கராசு என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூபாய் 6,000/– கொண்டுவந்துள்ளேன். அவர்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) K. நீலகண்டன், 26.04.2022. அய்யா, இன்று 26.04.2022 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு வாதியானவர் நிலையம் ஆஜராகி கொடுத்த மேற்படி புகார் மனுவை பெற்று விசாரணை முடித்து வாதியின் புகார்மனுவில் பிடிக்கக்கூடிய குற்றச்சாட்டிற்குரிய முகாந்திரம் இருந்ததால், உரிய அனுமதி பெற்று, இன்று 26.04.2022 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Cr.No.03/2022, U/s. 7 of The Prevention of Corruption (Amendment) Act 2018 படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைக்காக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.S.பாவை அவர்கள் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.